வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P.1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 18.07.2024 வியாழக்கிழமை இதழ் : 200 பக்கங்கள் : 12

## ரணில் தலைமையில் புதிய கூட்டணி ஜூலை 25இற்கு பின்னர் அறிவிப்பு?

கொழும்பு, ஜூலை 18

**எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தலைமையிலான புதிய மெகா கூட்டணியை அறிவிப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**



வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சையாக போட்டியிடுவார் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார மற்றும் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக உள்ள நிமல் லான்சா தலைமையிலான எம்.பிக்கள் குழு, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி தனியாக இயங்கிவரும் சரத் பொன்சேகா, ராஜித சேனாரட்ன, சரத் பொன்சேகா ஆகிய தரப்புகள் தவிர ஐக்கிய மக்கள் சக்தியின் 15 - 20 வரையான பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட

11

## தேர்தலை இழுத்தடிக்காது உடனடியாக நடத்துங்கள்!

### சிறீதரன் எம். பி. வேண்டுகோள்

கிளிநொச்சி, ஜூலை 18

கிடைக்கப்பெற்ற அதிகாரத்தை பயன்படுத்தி தேர்தல் ஆணைக்குழு உடனடியாக தேர்தலை நடத்தி மக்களின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏற்கனவே, தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்ற தேர்தலை அறிவித்து அதனை நிறுத்தியது. இவ்வாறு காலத்தை இழுத்தடிக்காமல் மக்களின் ஜனநாயக உரிமைக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். இலங்கை தமிழ் கட்சியின் நிலைப்பாடும் உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே - என்றார். (அ-ஐ)

## உரிய நேரத்தில் பெரமுன வேட்பாளரை அறிவிக்கும்!

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

உரியநேரம் வரும்போது எமது வேட்பாளர் யார் என்பதை நாம் அறிவிப்போம். மிகப்பலம் வாய்ந்த ஒருவரை ஏனையவர்களின் ஒத்துழைப்புடன் நாம் வேட்பாளராக முன்னிறுத்துவோம். ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் நாம் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை - இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ.

நேற்று கொழும்பில் செய்தியாளர்களுக்குக்

11



## குழப்பம் ஏற்படுத்திய நபர் கைது!

யாழ்ப்பாணம்,ஜூலை 18

யாழ்ப்பாணத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண பங்கேற்ற கலந்துரையாடலில் குழப்பம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வடக்கு மாகாண சுகாதார மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் பிரதம செயலர் பணிமனையில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, பாராளுமன்ற

11

## வெளியேறிய மருத்துவர்கள் மீள நாடு திரும்புகின்றனர்!

### யாழில் தெரிவித்தார் சுகாதார அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

பொருளாதார நெருக்கடியால் நாட்டிலிருந்து ஆயிரத்து 300 மருத்துவர்கள் வெளியேறினர். இவ்வாறு வெளியேறியவர்களில் 10 முதல் 15 வரையான மருத்துவர்கள் நாட்டுக்கு மீளவும் வந்துள்ளனர். அவர்கள் மருத்துவ பணியில் ஈடுபட்டுள்ளனர். இது எமக்கு நல்ல ஆரோக்கியமான விடயம் - என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண

11



## ஒற்றுமையை காட்டவே தமிழ் பொது வேட்பாளர்

### சித்தார்த்தன் எம். பி.

வவுனியா, ஜூலை 18

தமிழ மக்கள் ஒற்றுமையாக இருக்கிறோம் என்பதை உலகுக்கு காட்டுவதுதான் எங்கள் விருப்பம். அதுதான் தமிழ் பொது வேட்பாளர் விடயம் - இவ்வாறு கூறியுள்ளார் புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை மக்களில் பலர் விரும்புகிறார்கள் - சிலர் விரும்பவில்லை - சிலர் இது ஒரு விஷப் பரீட்சையாக இருக்கும் என்கிறார்கள். சிலவேளைகளில் நாம்

11

## ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்புக்கு விசேட குழு!

கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கு குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இந்த விடயம் தொடர்பான அமைச்சரவை பத்திரம் ஒன்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் வகையில் பிரதி பொலிஸ் மா அதிபர்

11



## உரங்களின் விலைகள் குறைகின்றன

கொழும்பு, ஜூலை 18

ஐந்து வகை உரங்களின் விலைகளை 2 ஆயிரம் ரூபாயால் குறைக்குமாறு அரச உர நிறுவனத்துக்கு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார்.

தென்னை, இறப்பர், தேயிலை போன்றவற்றுக்கான உரங்களின் விலைகளை குறைக்குமாறு நேற்று புதன்கிழமை அமைச்சர் உத்தரவிட்டார்.

இந்த விலை குறைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் என்று விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

## தேர்தலை காலந்தாழ்த்துவது சமூக அமைதிக்கு குந்தகம்!

### கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை பின்பற்றி உரிய காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாறாக அதனை காலந்தாழ்த்துவது சமூக அமைதிக்கும், நாட்டின் நன்மதிப்புக்கும் குந்தகம் விளைவிக்கும் - என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையால் அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தின்

11

## தமிழரின் வடக்கு, கிழக்கை தேசமாக அங்கீகரியுங்கள்!

### வேட்பாளர்களை கோருகின்றது இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்!

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் தமிழரின் வடக்கு, கிழக்கை தேசமாக அங்கீகரிக்க வேண்டும் என்று இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அமைப்பின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

நாட்டின் பொருளாதாரத்தை பிழையான விதத்தில் நிர்வகித்தமை, ஊழல், பொருளாதார ரீதியில் எந்த விதத்திலும்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

ஒருமுறை அறிஞர் ஒருவர் "இயற்கையின் படைப்புகள் அனைத்தும் ஒன்றே" என்ற மெய்மை விளக்கம் தந்து கொண்டிருந்தார்.

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு படித்த மேதை "பகுத்தறிவு கொண்ட ஒரு மனிதன் முதலைகளையும் புலிகளையும் அடக்கியாள முடியுமா? நாமெல்லாம் ஒன்று என்பதால் ஒருவன் புலியின்மீது சவாரி செய்யுமுடியுமா?" என்று கேட்டான்.

இந்த உரையாடலை கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் பலமாக சிரித்தார்.

"புலியின் முதுகின் மேலேறிச் செல்வது, இரண்டு உடல்களுக்கிடையே வேறுபாடு உண்டு என்பதைக் காட்டுகிறது. ஆனால், ஒரு மனிதன் புலியால் விழுங்கப்பட்டுவிட்டால் அவர்கள் இருவரும் ஒன்றே" என்றார்.

தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான வழக்கு விசாரணை நாளை திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் நடைபெறவிருக்கின்றது.

நாளைய விசாரணையின் போது வழக்கை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து, கடந்த பதினான்காம் திகதி தமிழ் அரசு கட்சியின் உயர்பீடம் கூடி ஆராய்ந்தபோதிலும் எதுவித முடிவும் எடுக்கப்படாமலே முடிவடைந்திருந்தது.

வழக்கில் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் தத்தமது முடிவுகளை கொடுப்பது பற்றி ஆராய்வதற்காக அந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. கூட்டத்தில் அனைவரும் எவ்வாறு நீதிமன்றுக்கு அறிக்கையிடுவது என்பது தொடர்பாக எட்டு எதிராளிகள் சார்பிலும் ஓர் அறிக்கையை தயாரித்து அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் எம். பி. சமர்ப்பித்திருந்தபோதிலும் அதனை ஏற்றுக்கொள்ள சிறீதரன் எம். பி. மறுத்துவிட்டாரெனத் தெரியவந்தது.

சுமந்திரன் தயாரித்து அந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்த அந்த ஆவணத்தில், தமிழ் அரசு கட்சியின் யாப்பின் பிரகாரம் பொதுச்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை நூற்றி ஐம்பத்து ஆறு என்பதை ஏற்றுக்கொள்வதாக எழுதப்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்ள சிறீதரன் தரப்பு மறுத்துவிட்டதாலேயே அந்தக் கூட்டத்தில் எந்த ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை என்று தமிழ் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் அரசின் யாப்பின்படி வடக்கு, கிழக்கில் உள்ள இருபத்தி மூன்று தொகுதிக் கிளைகளுக்குமான உறுப்பினர்களே பொதுச்சபைக்கு உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்படவேண்டும்.

உதாரணமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 11 தொகுதிகள் உண்டு. அவ்வாறு 11 தொகுதிகள் இருந்தபோது 11 எம். பிக்களும் இருந்தார்கள். ஒவ்வொரு தொகுதிக் கிளைக்கும் அந்தந்தத் தொகுதி எம். பிக்களே தலைவர்களாகவும் இருந்தார்கள். தொகுதிக் கிளைகளிலிருந்து உறுப்பினர்கள் பொதுச்சபைக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

ஆனால், இப்போது யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 11 தொகுதிகள் இருந்தாலும் ஏழு எம். பிக்களே மாவட்டத்தில் இருக்கின்றனர். அதனாலேயே பிரதேச சபைகள்தோறும் இயங்கும் கிளைகள் ஒவ்வொன்றையும் தொகுதிக் கிளைகளாகக் கொள்வதென்றும் வடக்கு - கிழக்கில் உள்ள ஐம்பத்தி ஏழு பிரதேச சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச கிளைகளையே தொகுதிக் கிளைகளாகக் கொள்வது எனவும் இதன்படி பொதுச்சபைக்கு முந்நூற்று இருபத்தியாறு உறுப்பினர்கள் தெரிவாவர் என்றும் ஏற்கனவே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி வவுனியாவில் நடைபெற்ற மத்திய செயல்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதனைச் சுட்டிக்காட்டிய சிறீதரன் ஏற்கனவே, செயல்குழு எடுத்த தீர்மானத்தின் படியே உறுப்பினர்கள் எண்ணிக்கை அமையவேண்டும் என்று வலியுறுத்தினார் எனத் தெரியவருகின்றது.

பிரதேச கிளைகளை தொகுதிக் கிளைகளாக கொள்வது என்று கட்சி முடிவு எடுக்காமலே பொதுச்சபைக்கு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டு கட்சி இயங்கி வந்திருக்கின்றது. அதனை அதுவரை சுட்டிக்காட்டாதவர்கள், இப்போது யாப்பை தூக்கிப்பிடித்துக்கொண்டு வருவது சட்டப்படி சரியானது தான். ஆனால், அதனை ஏற்றுக்கொண்டு, பொதுச்சபையையும் கூட்டி தெரிவுகளை செய்ய இந்த வழக்கை தாக்கல்செய்த கட்சிக்காரர்களும்தான் சம்மதித்திருந்தனர்.

அதிகம் ஏன், ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியாக நாட்டில் அரசியலமைப்பு சட்டம் மீறப்படுகின்றபோது, இலங்கையின் தேசிய பிரஜையாக பொங்கி எழுந்து உயர்நீதிமன்றில் இலங்கை அரசியலமைப்பை பாதுகாக்கப் போராடுகின்ற போராளியான சுமந்திரன், யாப்பு மீறப்பட்ட நிலையில் தெரிவான உறுப்பினர்களுடனேயே பொதுச்சபையைக் கூட்டி தலைவர் தெரிவை நடத்தியிருந்தார். தானும் அந்தப் பொதுச்சபைக் கூட்டத்திலேயே தேர்தலை சந்தித்து தலைவர் பதவிக்கான தேர்தலை எதிர்கொண்டார்.

அந்தக் கூட்டத்தில் நடந்த தலைவர் பதவிக்கான தேர்தலில் சுமந்திரன் வெற்றி பெற்றிருந்தால் இன்று எந்தப் பிரச்னையும் இன்றி கட்சி நடைபோட்டிருக்கும். கட்சியின் தலைவிதியோ தெரியவில்லை, அவர் தோற்க, கட்சி இன்று நீதிமன்ற படிகளை ஏறி இறங்கவேண்டிவந்திருக்கின்றது.

- ஊர்க்குருவி

## மன்னார் மருத்துவமனைக்கும் சென்றார் சுகாதார அமைச்சர்!



யாழ்ப்பாணம், ஜூலை 18

நேற்று வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையிலான அமைச்சின் செயலாளர் உள்ளடங்கலான குழுவினர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு நேற்று வருகை தந்தனர்.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வதாக இந்த களப் பயணம் அமைந்தது.

இதன்போது, மருத்துவமனை கேட்போர் கூடத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், மருத்துவமனையின் பணிப்பாளர், அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் அமைச்சரிடம் நேரடியாக குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டினர்.

குறிப்பாக சி. ரி. ஸ்கான் இயந்திரம் இன்மையால் நாள்தோறும் அதிகளவான நோயாளர்கள் வெளிமாவட்டங்களுக்கு செல்லும் நிலைமை, மருத்துவர்கள், மருந்து பற்றாக்குறை, சுத்திகரிப்பு பணியாளர் குறைபாடு, மருத்துவ உபக ணங்கள் குறைபாடு, அவசர நோயாளர் வண்டியின் குறைபாடு உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் அமைச்சர் தலைமையிலான குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, விரைந்து தீர்க்கக்கூடிய மிகமுக்கிய விடயங்களை விரைவில் தீர்த்துத் தருவதாகவும் ஏனைய விடயங்களை வரவு - செலவு திட்டத்தின் ஊடாக பெற்றுத் தருவதாகவும் அமைச்சர் வாக்குறுதி வழங்கினார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான் உட்பட பலர் பங்கேற்றனர். (ஐ)

## கொஹூவலை மேம்பாலம் பிரதமரால் திறந்து வைப்பு



கொழும்பு, ஜூலை 18

கொழும்பு - கொஹூவலை மேம்பாலம் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கொஹூவலை சந்தியில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து ஹங்கேரியின் உதவியுடன் கொஹூவலை சந்திப்பில் இந்த மேம்பாலம் நிர்மாணிக் கப்பட்டது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன, பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலோவத்த, தெஹிவளை, கல்கிசை மாநகர சபையின் முன்னாள் மேயர் சுனேத்ரா ரணசிங்க ஆகியோர் மேம்பாலத்தை திறந்து வைத்தனர். (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

சுழிபுரம் கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தின் ஏற்பாட்டில் "ஐரோப்பிய அரசியலில் இடதுசாரி அலை" பிரான்ஸ் தேர்தல் முடிவை முன்னிறுத்திய விரிவான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தொல்புரம் மேற்கு, சுழிபுரம் என்ற முகவரியில் அமைந்துள்ள கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தொடக்கவுரையை தர்க்கா நகர் மற்றும் வவுனியா கல்வியியல் கல்லூரிகளின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன், கருத்துரையை பிரான்ஸில் இருந்து வருகை தந்துள்ள ஆய்வாளர் ச. தில்லைநடேசன் ஆகியோர் வழங்குவர். தொடர்ந்து சபையோரின் கருத்துரை களுடன் கலந்துரையாடல் இடம்பெறும். (ஐ)

## யுவதி குளிப்பதை காணொலி எடுத்தார் விரிவுரையாளர்!

கொழும்பு, ஜூலை 18

யுவதி ஒருவர் குளித்த போது அவரை காணொலி எடுத்த விரிவுரையாளர் தொடர்பில் வவுனியா பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் ஆங்கில வகுப்பு நடத்தும் குடியிருப்பிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் தங்கும் விடுதியில் குறித்த விரிவுரையாளர் ஆங்கில வகுப்பு நடத்தி வருகிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வகுப்பு நடந்தபோது அங்கு தங்கியிருந்த யுவதி ஒருவர் குளிப்பதற்காக குளியலறைக்கு சென்றுள்ளார். அந்தச் சமயம் வகுப்பை நிறுத்தி விட்டு விரிவுரையாளர் குளியலறையின் யன்னல் பக்கம் சென்று தனது கைபேசியில் யுவதி குளிப்பதை காணொலியாக எடுத்துள்ளார்.

குளித்துக்கொண்டிருந்த பெண் யன்னல் வழியே கைபேசி தெரிவதைக் கண்டு சத்தம் போட்டுள்ளார். இதைத் தொடர்ந்து விரிவுரையாளர் அங்கிருந்து சென்றுள்ளார்.

அங்குள்ள சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளின்படி குளியலறை அருகே விரிவுரையாளர் நிற்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்க பல்கலைக்கழக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
18.07.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், ஆடி 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஆதரிக்க சொன்னவர்களின் பதில் என்ன?

முன்னைநாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இவ்வாறு கூறியிருக்கின்றார். அதாவது, தமிழ் மக்களுக்கு இராணுவத்தின்மீது கோபமில்லை. அவர்களுக்கு கோபம் இருந்திருந்தால் - அவர்கள் எனக்கு வாக்களித்திருக்கமாட்டார்கள். 2010 ஜனாதிபதித் தேர்தலின்போது சரத் பொன்சேகாவை ஆதரிக்குமாறு இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரங்களை முன்னெடுத்திருந்தது. இலங்கை தமிழ் அரசு கட்சி, ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் ஆகிய கட்சிகள் அனைத்தும் பொன்சேகா ஆதரவு பிரசாரங்களை முன்னெடுத்திருந்தன.

ஆனால், அதே கட்சிகள் அந்த ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் - இராணுவத்தின் பிரசன்னத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்று பிரசாரங்களை மேற்கொண்டிருந்தன. எதற்காக பொன்சேகாவை ஆதரித்தார்கள் - கேட்டால் மகிந்த எதிர்ப்பு என்று பதில் வரும் அல்லது தமிழ் மக்கள் அப்படித்தான் சிந்தித்தார்கள் என்றும் பதில் சொல்லக்கூடும். ஆனால், ஓர் அரசியல் தலைமைக்கு தான் என்ன செய்கிறேன் - ஏன் செய்கிறேன் என்னும் புரிதல் இருக்கவேண்டும். அவ்வாறில்லாது விட்டால் அவர்களால் ஒரு தலைமையாக தங்களை முன்னிறுத்த முடியாது.

2024 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டுமென்னும் உரையாடல்கள் நடைபெற்று வரும் நிலையில், அதனை எதிர்கொள்வதில் உறுதியான நிலைப்பாட்டை இதவரையில் தமிழ் கட்சிகள் காண்பிக்கவில்லை. தொடர்ந்தும் தளம்பலான அணுகுமுறையையே முன்னெடுத்து வருகின்றனர். சில கட்சிகள் கொள்கை அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதாகக் கூறினாலும்கூட, அதற்கான முயற்சிகளை இதுவரையில் மேற்கொள்ளவில்லை. ஒருபுறம், தமிழ் சிவில் சமூக அமைப்புகளின் முயற்சியை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு மறுபுறம் தென்னிலங்கை வேட்பாளர்களுடன் உறவாடுவதிலும் தீவிரம் காண்பித்து வருகின்றனர். இது அவர்களின் தளம்பல் நிலைமையை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சரத் பொன்சேகாவின் இவ்வாறானதொரு கருத்து கவனத்தைப் பெறுகின்றது. 2010இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தூரநோக்குடன் விடயத்தை கையாண்டதா என்னும் கேள்விக்கு பொறுப்புக்கூறும் நிலையில் அன்று முடிவெடுத்தவர்கள் இருக்கின்றனரா? மக்களுக்கு பொறுப்புக்கூறும் அடிப்படையில் தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் செயல்படுவதில்லை. இன்றுவரையில் இதுதான் தொடர் கதை. போருக்கு பின்னரான மூன்று தேர்தல்களிலும் தென்னிலங்கை வேட்பாளர்களை நோக்கி விரல் நீட்டிவிட்டு, அடுத்த பாராளுமன்றத் தேர்தல்களில் அவர்களை விமர்சித்து - எதிர்த்து பிரசாரங்களை செய்யும் சித்துவிளையாட்டு அரசியலையே தமிழ்த் தேசிய கட்சிகள் இதுவரையில் முன்னெடுத்து வந்திருக்கின்றனர். இதனால் தமிழ் மக்கள் நன்மையை பெற்றிருந்தால் அது வேறு விடயம். ஒன்று நன்மையை தரவில்லை, அதேவேளை, தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தை கொடுக்கிறது என்றால் அவ்வாறான செயல்பாடுகளை மீண்டும் செய்யுமாறு எந்த அடிப்படையில் கோர முடியும்? அதற்கான தார்மீக தகுதி தமிழ்த் தேசிய கட்சிகள் என்போருக்கு இருக்கின்றதா?

# வடக்கு சுகாதார மேம்பாடு தொடர்பில் அமைச்சர் தலைமையில் நேற்று கூட்டம்!



*யாழ்ப்பாணம், ஜூலை 18*

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண வட மாகாண சுகாதார மேம்பாடு தொடர்பில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் பணிமனையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், வடக்கு மாகாணத்தின் சுகாதார நிலைமைகள் தொடர்பிலும், மேம்படுத்தப்பட வேண்டிய சுகாதார விடயங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், சுகாதார அமைச்சின் செயலாளர் மகிபால மற்றும் மருத்துவர் அசேல குணவர்த்தன மருத்துவர்கள், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

## கிளிநொச்சி ஆலய திருவிழாவில்

# ரூபா 6 இலட்சத்துக்கு ஏலம்போன மாம்பழம்

*கிளிநொச்சி, ஜூலை 18*

கிளிநொச்சி - பளை, கச்சார்வெளி தான்தோன்றி பிள்ளையார் கோவில் பூசைக்கு வைக்கப்பட்ட மாம்பழம் 6 இலட்சம் ரூபாய்க்கு நேற்று ஏலம்போயுள்ளது.

கச்சார் வெளி தான்தோன்றி பிள்ளையார் ஆல யத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், 5ஆம் திருவிழாவான மாம்பழத் திருவிழா நேற்று நடைபெற்றது.

மாம்பழத் திருவிழாவில் வசந்தமண்டப் பூசைகள் நிறைவுபெற்றதும், விநாயகப்பெருமானின் பூசைக்கு வைக்கப்பட்ட மாம்பழங்கள் இரண்டு ஏலத்தில் விடப்பட்டுள்ளன.

இதன்போது பக்தர்கள் ஏலம் விலைகூறி இறுதியாக 6 இலட்சம் வரை சென்ற நிலையில், கச்சார் வெளியினை சேர்ந்த அரியகுட்டி வள்ளிப்பிள்ளை பூலோகம் குடும்பத்தினர் மாம்பழத்தை ஆறு இலட்சம் ரூபாவிற்கு பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

(அ)

# சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஜூலை 18*

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முகவிலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல் "கருட புராணம் கூறும் நல்வினையும் தீவினையும்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# 43 பொலிஸ் பிரிவுகளில் பாதாள உலக செயல்பாடு!

*கொழும்பு, ஜூலை 18*

பாதாள உலக செயல்பாடுகள் அதிகளவில் இடம்பெறும் 43 பொலிஸ் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரவித்துள்ளன.

அவ்வாறு அடையாளம் காணப்பட்ட 43 பொலிஸ் பிரிவுகளும் மேல் மற்றும் தென் மாகாணங்களில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


பாதாள உலகச் செயல்பாடுகள் இடம்பெறுவதாக அடையாளம் காணப்பட்டுள்ள 43 பொலிஸ் பிரிவுகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் பாதாள உலகக் குழு செயற்பாட்டாளர்கள் சுமார் 1091 பேர் காணப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக உயர் மட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெவ்வேறான குற்றங்களை புரிந்து இந்நாட்டிலிருந்து தப்பியோடிய பாதாள உலகக் குழு செயற்பாட்டாளர்கள் சுமார் 40 பேர் டுபாய் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நான்கு அடுக்குமாடி குடியிருப்புகளில் தங்கியிருப்பதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவர்களை கைது செய்து நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 18 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 02
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவாதசி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
எந்த வேலையையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களால் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். வெற்றி பெறும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்துபோகும். ஊழியர்களிடம் வளைந்து கொடுத்து போவது நல்லது. இடம் பொருள்ஏவல்அறிந்து செயல்பட வேண்டும்.

**தனுசு**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உங்களின் ஆலோசனையை ஏற்கப்படும். புகழ் கௌரவம் கூடும்.

**கும்பம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**மீனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

# கர்நாடக அரசை கண்டித்து விவசாயிகள் ரயில் மறியல்

## 1,600 பேர் பொலிஸாரால் கைது

தஞ்சாவூர், ஜூலை 18

காவிரியில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்து டெல்டா மாவட்டங்களில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் 1,600 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.



தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்கள் சார்பில் தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகை மாவட்டங்களில் ரயில் மறியல் போராட்டங்கள் இடம் பெற்றன.

காவிரி ஆற்றிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க மறுக்கும் கர்நாடக அரசையும் நீர் திறக்க நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்ப்பதாக குற்றம் சாட்டி மத்திய அரசையும் கண்டித்து இந்தப் போராட்டம் இடம்பெற்றது. (எ)

# தமிழகத்துக்கு தண்ணீர் தர வேண்டும் ஓரணியில் திரண்ட அரசியல் கட்சிகள்

சென்னை, ஜூலை 18

தமிழகத்துக்கு காவிரி நீரைப் பெற துணை நிற்பதாக பா. ஜ. க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகள் தெரிவித்தனர். காவிரி விவகாரம் தொடர்பில் நடைபெற்ற சட்டப்பேரவை அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு கூறினர்.

எந்த ஆட்சியாக இருந்தாலும் தமிழகத்துக்கு தண்ணீர் கொடுக்காமல் வஞ்சிக்கின்றனர். தி. மு. க. போதிய நீரை பெற்றுத்தர அரசியல் ரீதியிலும், சட்ட ரீதியாகவும் அழுத்தம் தரவேண்டும். தமிழக முதல்வர் கொண்டுவந்த கண்டன தீர்மானத்தை மட்டும் அ. தி. மு. க. ஆதரிக்கிறது- முன்னாள் அமைச்சர்களான ஓ. எஸ். மணியன், எஸ். பி. வேலுமணி ஆகியோர் தெரிவித்தனர்.

காவிரி விவகாரத்தில் தமிழக மக்களின் உரிமையைப் பெற தமிழக அரசுடன் பா. ஜ. க. ஒன்றுபட்டு நிற்கும். இதில் பிரதமர் தலையிட வாய்ப்பே இல்லை. மாநில உரிமையைப் பெற அரசியல் பேசக்கூடாது. மக்கள் உரிமையைப் பெற ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என்று தமிழக பா. ஜ. க. நிர்வாகி கரு. நாகராஜன் கூறினார்..

முதல்வரின் தீர்மானத்தை காங்கிரஸ் ஆதரிக்கிறது. கர்நாடக அரசு உச்ச நீதிமன்றம் மற்றும் காவிரி மேலாண்மை ஆணைய தீர்ப்பை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். பிரதமர் இதில் தலையிட்டு தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய உரிமையைப் பெற்றுத்தர வேணடும். இந்த விவகாரத்தில் அனைவரிடமும் ஒற்றுமை இருக்கிறது என்று நம்புகிறோம் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

கர்நாடகாவின் பாசனப்பரப்பு அதிகரித்துள்ளது. தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல் அதிகரித்துள்ளது குறித்தும் தண்ணீர் பெறவும் உச்ச நீதிமன்றத்தை நாட வேண்டும். தமிழக அரசு வலிமையான அதிகாரம் வாய்ந்த ஆணையத்தை உருவாக்கவும் உச்ச நீதிமன்றத்தில் வலியுறுத்த வேண்டும்- இவ்வாறு பா. ம. க. நிர்வாகி ஜி. கே. மணி கூறினார்.

தமிழகத்துக்கு தண்ணீர் தர வேண்டும் என்று அனைத்து கட்சித் தலைவர்கள் பிரதமர் மோடியைச் சந்தித்து வலியுறுத்த வேண்டும். அகில இந்திய காங்கிரஸ் தலைவரை சந்தித்து கர்நாடக அரசுக்கு வழிகாட்டு தலை வழங்குமாறு அழுத்தத்தை கொடுக்க வேண்டும் போன்ற ஆலோசனைகளை முன்வைத்தோம். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையே கர்நாடக அரசு மதிக்கவில்லை என்பது தான் அதிர்ச்சியளிக்கிறது. இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட வேண்டும் என்று வி. சி. க. தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார். (எ)

## தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 18

மு. க. ஸ்டாலின் தலைமையிலான தி. மு. க. அரசின் செயல்பாடுகளைக் கண்டித்து தமிழகம் முழுவதும் 22 ஆம் திகதி அ. ம. மு. க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன.

தி. மு. க. அரசு தமிழக மக்களின் மீது எண்ணற்ற சுமைகளை ஏற்றி வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. தேர்தல் நேரத்தில் வழங்கிய வாக்குறுதிகளைச் செயல்படுத்தாமல், ஆட்சிக்கு வந்ததிலிருந்து 3ஆவது முறையாக மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. இதனைக் கண்டித்தே ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன. (எ)

## ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை சி. பி. ஐ. விசாரிக்க வேண்டும்

### ஓ. பி. எஸ். மீண்டும் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 18

அரசியல் தலையீட்டுக்கு அதிக வாய்ப்பு உள்ளதால் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை சி. பி. ஐ. விசாரிக்க வேண்டும்.

இந்த வழக்கை சி. பி. ஐக்கு மாற்ற வேண்டும் என்று தி. மு. க. அரசை முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (எ)

## விஜயபாஸ்கருக்கு விளக்கமறியல்



கரூர், ஜூலை 18

400 கோடி ரூபாய் பெறுமதியான நில மோசடி குற்றச்சாட்டில் கைதான முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கரை இம்மாதம் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நிலையில் அவர் நேற்றுக் காலை திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போட எதிர்க்கட்சியினரே சதித் திட்டம்!

## ஜனாதிபதியின் தொழில் உறவுகள் ஆணையாளர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 18

**ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு ரணில் விக்ரமசிங்கவோ அல்லது அரசாங்கமோ எந்தவித மறைமுக நடவடிக்கையையும் மேற்கொண்டதில்லை என ஜனாதிபதியின் தொழில் உறவுகள் ஆணையாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எதிர்க்கட்சியே தேர்தலை பிற்போடுவதற்கான சதித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அதனை மறைக்க ரணில் விக்கிரமசிங்கவின் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

ஆனால் உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கிறார். கடந்த வாரம் வியாபாரி ஒருவரால் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை கேள்விக்குட்படுத்தி, உயர் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

எனினும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. ஆனால் குறித்த வழக்கு தாக்கல் செய்த நபர், தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் ஒருவரின் நெருங்கிய நண்பர்.

இதன் மூலம் தேர்தலை பிற்போடுவதற்கு சதித்திட்டங்களை மேற்கொள்பவர்கள் யார் என்பதை புரிந்துகொள்ளலாம். அதனால் ஜனாதிபதி தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கிறார்.

அவர் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவார். அதேபோன்று பெரும்பான்மை வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதை சஜித், அநுர யாராலும் தடுக்க முடியாது-என்றார். (அ)

# இரு பஸ்கள் மோதி விபத்து; ஒருவர் பலி! 8 பேர் காயம்!!

கொழும்பு, ஜூலை 18

குருநாகல் - மெல்சிறிபுர பகுதியில் இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ்ஸும் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த பஸ்ஸுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ்ஸை செலுத்திய 31 வயதான சாரதி உயிரிழந்தார்.

காயமடைந்தவர்களில் மூவர் குருநாகல் வைத்தியசாலையிலும் 5 பேர் பொல்கொல்ல வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிரான மனுவை மீளப் பெற்றார் டயானா!

கொழும்பு, ஜூலை 18

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து தாம் நீக்கப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மீளப் பெறுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே உயர்நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, டயானா கமகே சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், மனுவைத் தொடர வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவித்தனர்.

அத்துடன் அதனைத் திரும்பப் பெற அனுமதிக்க வேண்டும் என வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

இதன்படி அந்த மனுவை மீளப் பெற உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. (அ)

# மதுபானப் போத்தலால் அரச பஸ் மீது தாக்குதல்

## பயணி ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஜூலை 18

மதுபானப் போத்தலால் அரச பஸ் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட நிலையில் பயணி ஒருவர் காயமடைந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போவுக்குரிய என்.டி-9941 இலக்க பஸ் மீது பிற்பகல் 2 மணியளவில் இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் வைத்து தனியார் பஸ் காப்பாளர் ஒருவரால் மதுபானப் போத்தல் மூலம் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதலை மேற்கொண்ட நபர் பொதுமக்கள், பயணிகள், சாரதி மற்றும் நடத்துநரால் பிடிக்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இந்த சம்பவத்தில் மதுபானப் போத்தலின் கண்ணாடித் துகள்கள் பட்டு பயணி ஒருவரும் காயமடைந்தார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# மருந்துகளுக்காகச் செலுத்த வேண்டிய நிலுவை 80 கோடி ரூபாயை அண்மித்தது!

கொழும்பு, ஜூலை 18

சுகாதார அமைச்சின் மருந்துவ விநியோகப் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளுக்காக விநியோகஸ்தர்களுக்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகை 800 மில்லியன் ரூபாவை அண்மித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பைச் சேர்ந்த வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ இதனைத் தெரிவித்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம், மருந்துவ வழங்கல் பிரிவிடமிருந்து தாம் பெற்றுக் கொண்ட தகவல்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# மகிந்த 978, சிறிசேன 557 ஹெலிகொப்டர் பயணம்

கொழும்பு, ஜூலை 18

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2005 மற்றும் 2015 இற்கு இடையில் ஜனாதிபதியின் சிறப்புரிமையின் கீழ் விமானப்படை ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி 978 விமான பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஐந்தாண்டு பதவிக்காலத்தில் 557 தடவைகள் பயணித்துள்ளதாக இலங்கை விமானப் படை தலைமையகத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படைத் தலைமையகம் முதலில் கோரிய தகவல்களை வழங்கத் தவறியதை அடுத்து தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிடம் செய்த முறையீட்டிற்கு பதிலளிக்கும் வகையில் இந்தத் தரவு வெளியிடப்பட்டது.

தகவல் அறியும் உரிமை ஆணையத்தில் செய்யப்பட்ட முறையீட்டின்படி, ஆணையம் விமானப்படை தலைமையகத்துக்கு இது தொடர்பான உத்தரவை பிறப்பித்தது.

அந்த உத்தரவைத் தொடர்ந்து, ஜூலை 11, 2024 அன்று, கோரப்பட்ட தகவலின் ஒரு பகுதிக்கு மட்டுமே விமானப்படையால் தகவல் வழங்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியின் சிறப்புரிமையின் கீழ் தனது 5 வருட காலப்பகுதியில் 557 தடவைகள் விமானத்தில் பயணித்துள்ளார். அவர் மொத்தம் 131,277.17 கிலோமீட்டர் தூரம் பயணித்து உள்ளார்.

ஒப்பீட்டளவில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலத்தில் விமானப்படை ஹெலிகொப்டர்களை அதிகளவில் பயன்படுத்தி உள்ளார்.

# யாழ். தமிழ்ச்சங்கத்தின் ஆடிப்பிறப்பும் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும்







யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்திய ஆடிப்பிறப்பு விழாவும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் நேற்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் நவாலியூர் சோமசுந்தர புலவரின் திருவுருவச் சிலைக்கும் பாடசாலை நிறுவுநர் பண்டிதர் தம்பையாவின் திருவுருவச் சிலைக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு தொடர்ந்து பாடசாலை அதிபர் கி. கிருஷ்ணானந்தா வாழ்த்துரையையும் ஜீவா. சஜீவன் தொடக்கவுரையையும் வழங்கினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்துறைப் பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் ஆடிப்பிறப்பும் நவாலியூர் சோமசுந்தரப்புலவரும் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன், யாழ்ப்பாணம் மறைக்கோட்ட முதல்வரும் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவருமாகிய அருட்பணி ஜெரோ செல்வநாயகம், யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர்களான கலாநிதி விஜயபாஸ்கர், ம. சத்தியகுமார், இ. சர்வேஸ்வரா, நடனத்துறை முன்னாள் தலைவர் கலாநிதி கி. அருட்செல்வி, தமிழ்ச் சங்க பொருளாளர் லோ. துஷிகரன், ஆட்சிக் குழு உறுப்பினர்களான ந. ஐங்கரன், செ. நிவேதன், விரிவுரையாளர் வேல் நந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் நிறைவில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகா, ராஜித, வெல்கமவை ஓரம் கட்டும் ஐக்கிய மக்கள் சக்தி!

## கூட்டங்கள், நிகழ்வுகள், ஏனைய விடயங்களில் ஈடுபடுத்துவதில்லை என கட்சி தீர்மானம்

கொழும்பு, ஜூலை 18

**பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா உள்ளிட்ட களுத்துறை மாவட்ட சபை உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன மற்றும் குமார வெல்கம ஆகியோரையும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் ஏனைய விடயங்களில் ஈடுபடுத்துவதில்லை என அக்கட்சி தீர்மானித்துள்ளது.**

கட்சி மற்றும் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் விமர்சித்து கருத்து தெரிவித்து செயற்படும் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அக்கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியை விமர்சிப்பதாக தெரிவிக்கப்படும் இவர்கள் மூவரையும் கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதன் உறுப்பினர்கள் பலரும் கட்சி தலைமையிடம் அண்மைய தினங்களாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கி, அப் பதவியை மற்றுமொருவருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள செயற்குழு கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

சரத் பொன்சேகா அண்மையில் பாராளுமன்றத்தில் கட்சி தலைமை தொடர்பில் விமர்சிக்கும் விதத்தில் உரையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# 4 வயது சிறுமியின் சடலம் கிணற்றில் இருந்து மீட்பு !

கொழும்பு, ஜூலை 18

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியில் கிரிபோருவ பிரதேசத்தில் உள்ள கிணற்றிலிருந்து 4 வயது சிறுமியின் சடலம் ஒன்று ருவன்வெல்ல பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

இதேவேளை, சிறுமி மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் சிறுமியின் தாயார் பேச முடியாத நிலையில், மயங்கிக் கிடந்ததை அப்பகுதி மக்கள் அவதானித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ருவன்வெல்ல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நோயாளர் கொடுப்பனவு 100 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 18

இதயம் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்காக ஜனாதிபதி நிதியத்தின் கீழ் செலுத்தப்படும் தொகையை 100 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தகவலை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அதன்படி விண்ணப்பம் கிடைத்த ஒரு வாரத்துக்குள் கொடுப்பனவை செலுத்துவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# ஜனநாயக இடதுசாரி முன்னணியின் புதிய தலைவர் நிரோஷன் பிரேமரத்ன



கொழும்பு, ஜூலை 18

வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் புதிய தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பிரேமரத்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக, அவர் தேசிய சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றம் நுழைந்தார். கட்சியின் தலைமைத்துவத்தை இளைஞர் ஒருவருக்கு வழங்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியில் அங்கம் வகித்த நிரோஷன் பிரேமரத்ன நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் நடைபெற்ற கட்சி மாநாட்டில் தலைவராக பதவியேற்றார்.

(அ)

# முன்னாள் கிரிக்கெட் வீரர் வீட்டில் சுட்டுக் கொலை!

## விசாரணை வேட்டை தீவிரம்

கொழும்பு, ஜூலை 18

அம்பலாங்கொடை கந்த மாவத்தை பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

41 வயதுடைய தம்மிக்க நிரோஷன் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

அவர் தனது வீட்டு முற்றத்தில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரி தொடர்பில் எவ்வித தகவல்களும் இதுவரை வெளியாகாத நிலையில் உயிரிழந்தவரின் தலையில் சுடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

தம்மிக்க நிரோஷன் என்ற குறித்த நபர், 2002ஆம் ஆண்டு இலங்கை 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் வீரர் என தெரிவிக்கப்பட்டது.

பிரபல பாடசாலை ஒன்றின் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியின் தலைவராகவும் இவர் செயற்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

(அ)

# அரசாங்கத்துக்கு எதிராக உயர்நீதிமன்று செல்வோம்

## எச்சரிக்கிறார் ஜோசப் ஸ்டாலின்

கொழும்பு, ஜூலை 18

அண்மைய வேலைநிறுத்தத்தின்போது கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு ஒரு தடவை கொடுப்பனவு வழங்கும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர் - அதிபர் தொழிற் சங்கங்கள் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

"1986 இல், உயர் நீதிமன்ற சம்பள மாற்றங்கள் தொடர்பில் வழங்கியுள்ள தீர்ப்பின் பிரகாரம் இதுபோன்ற சமத்துவமற்ற சம்பள அதிகரிப்பை ஏற்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் செல்வோம்" என்றும் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் இவ்வாறு பாரபட்சம் காட்டக்கூடாது என்றும் அவர் கூறினார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே என் ஆதரவு

## மகிந்தானந்த பகிரங்க அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக பரிந்துரைப்பதற்கு, பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுஜன பெரமுன தரப்பில் கூறப்படும் தம்மிக்க பெரேராவுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் தாம் தீர்மானிக்கவில்லை என்றும் அளுத்கமகே குறிப்பிட்டார்

ரணில் விக்கிரமசிங்கவின் முதிர்ச்சி, சர்வதேச அனுபவம் மற்றும் தீர்க்கமான நடவடிக்கைகள் ஆகியவை, அவர் நாட்டை வழிநடத்துவதற்கு பொருத்தமானவர் என்பதற்கான முக்கிய அம்சங்கள் என்று அவர் எடுத்துரைத்தார்.

இந்தநிலையில் பொதுஜன பெரமுன விரைவில், இது தொடர்பான கொள்கை அடிப்படையிலான தீர்மானத்தை எட்டும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதன்படி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படுவார், அவருடன் இணைந்து உருவாக்கப்படும் புதிய கூட்டணியில், அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# மாணிக்கக்கல் கடத்த முயன்ற ஜப்பானியத் தம்பதியர் கைது!

கொழும்பு, ஜூலை 18

பல இலட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக் கற்களை இலங்கையிலிருந்து கடத்த முயன்ற ஜப்பானியத் தம்பதியினர் கைது செய்யப்பட்டனர்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து பாதுகாப்பு அதிகாரிகளால் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காலை இந்த தம்பதியினர் கைது செய்யப்பட்டனர்.

விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தின் நுழைவாயிலில் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் மூத்த பெண் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் சந்தேகத்தின் பேரில் இவர்களின் உடைமைகளை சோதனையிட்டுள்ளார்.

இதன்போது, இந்த தம்பதியினர் ஜப்பானிய பிரஜைகள் என அடையாளம் காணப்பட்டதோடு, எக்ஸ்ரே ஸ்கானரில் சூட்சுமமாக மறைத்து வைத்திருந்த விலையுயர்ந்த பல்வேறு வகையான சிறிய மாணிக்கக் கற்கள் அடங்கிய சிறிய பையை கைப்பற்றினர்.

ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர் மாணிக்கக் கற்களுடன் குறித்த தம்பதியினர் மேலதிக விசாரணைகளுக்காக இலங்கை சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ரணிலிடமே மீண்டும் ஆட்சியை கையளிக்கவேண்டும்!

## வஜிர அபேவர்த்தன கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 18**

**அனுபவும் முதிர்ச்சியும் உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே மீண்டும் ஆட்சியை வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஐக்கிய லக்வனிதா முன்னணியின் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

மேலும், "எல்-போர்ட்" அரசியல் கட்சிகளுக்கு எதிர்காலத்தில் நாட்டை ஆள்வதற்கான வாய்ப்பு கிடைக்கலாம்.

ஆனால், தற்போது அனுபவமுள்ள ஜனாதிபதிக்கே ஆட்சியை மக்கள் வழங்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி எப்பொழுதும் உண்மையை பேசும் கட்சியாகும்.

ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றப் பின் அரசியல் கட்சிகள் பொய் சொல்ல முடியாத சட்டமூலத்தைக் கூட நிறைவேற்றியுள்ளார் - என்றார். (அ)

# சிறுமியை துன்புறுத்திய நான்கு பெண்கள் கைது!

கொழும்பு, ஜூலை 18

சிறுமி ஒருவரை 4 பெண்கள் அடித்துத் துன்புறுத்தும் காணொலி ஒன்று அண்மையில் பகிரப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயார் உட்பட நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டனர் என்று கேகாலை - அரநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த காணொலி தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 42 தொடக்கம் 78 வயதுடையவர்கள் என்பதுடன் இவர்கள் அரநாயக்க பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர். கைதான நால்வரும் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

துன்புறுத்தலுக்கு உள்ளான சிறுமி அவரின் தந்தையின் பாதுகாப்பில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)



# பளை பிரதேச செயலகத்தில் ஆடிக் கூழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஜூலை 18

ஆடிப் பிறப்பை முன்னிட்டு பளை பிரதேச செயலக நலன்புரி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று ஆடிக் கூழ் வழங்கும் நிகழ்வு பளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வை பளை பிரதேச செயலாளர் த.ஜெயசீலன் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், பிரதேச செயலகத்தில் சேவைகளை பெற வந்தவர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# திருவாசகம் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை18

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது. இந்த சொற்பொழிவு சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு நாகதம் பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் செ. த. குமரன் "மாணிக்கவாசகரும் திருவுந்தியும்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் விடுதி சேவைகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் தங்கி நின்று சிகிச்சை பெறும் விடுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட வாகனத் தரிப்பிடம், நலன்புரிச்சங்க சிற்றுண்டிச்சாலை என்பனவும் திறந்து வைக்கப்பட்டன.

குறித்த வைத்தியசாலையின் நோயாளர் தங்கி நின்று சிகிச்சை பெறும் விடுதி பல ஆண்டு காலமாக இயங்காமல் காணப்பட்டது.

இந்நிலையில் வைத்தியசாலையில் புதிதாக பொறுப்பேற்றுள்ள வைத்தியர் அதிகாரி எஸ்.செந்தூரனின் கடின முயற்சி காரணமாக இந்த விடுதி மீண்டும் உத்தியோகபூர்வமாக நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பொறுப்பு வைத்திய அதிகாரி எஸ்.செந்தூரன் தலைமையில் நடைபெற்ற




இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பி.ஜி.மஹிபால, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.பத்திரன, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், பதவி நிலை வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை பணியாளர்கள், நலன்புரிச் சங்கத்தினர், சமூக மட்ட பொது அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# மலையகத்தின் ஆளும், எதிர்க்கட்சி எம். பிக்களுடன் ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, ஜூலை 18

மலையகத்தின் ஆளும், எதிர்க்கட்சிகளை சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

பெருந்தோட்ட பிரதேசங்களில் தற்போது காணப்படும் தோட்ட வீடுகள் மற்றும் லயன் அறைகளை ஒன்றிணைத்து கிராமங்களாக மாற்றுவதற்கான புதிய சட்டத்தை அறிமுகம் செய்வதற்கான சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள அமைச்சரவை பத்திரம் தொடர்பில் இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், தமிழ் முற்போக்கு கூட்டமைப்பின் தலைவர் மனோ கணேஷன், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஸ், கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர் பழ்னி திகாம்பரம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.வேலுகுமார் மற்றும் எம்.உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

கலந்துரையாடல் வெற்றிகரமாக நடைபெற்றது. கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் திட்டத்துக்கு ஆதரவைத் தெரிவித்த அதேவேளை, சில திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் தேவை என்பதையும் வலியுறுத்தினர். தோட்டங்கள், கிராமங்களாக மாற்றப்பட்டால் அது லயன் அறைகளுக்கு அங்கீகாரத்தை வழங்குவதைப் போன்றாகிவிடும் என்று சிலர் குறிப்பிடுக்கின்றனர். ஆனால், அது அவ்வாறில்லை.

புறக்கோட்டையில் சுமார் 7,500 பேர் தொழில் புரிகின்றனர். இவர்கள் நினைத்தால் தமது பெற்றோருக்கு வீடொன்றை நிர்மாணித்துக் கொடுக்க முடியும். அவர்களுக்கான மலசலகூடங்களையும் அமைத்துக் கொள்ள முடியும். அதற்கான வசதிகள் அவர்களுக்கு காணப்பட்டாலும், காணி உரிமை இன்மையால் ஒரு செங்கல்லைக் கூட நாட்ட முடியாத நிலைமையில் காணப்படுகின்றனர். எனவே, இந்த சந்தர்ப்பத்தில் தமக்கு எது முக்கியம் என்பது மக்களுக்கு தெரியும். வீட்டு உரிமை மற்றும் காணியுரிமை என்பவை வெவ்வேறானவை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். தோட்டங்களை கிராமங்களாக்கினால் மாத்திரமே அந்த மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் சிறப்புரிமைகள் தடையின்றி கிடைக்கும் - என்றார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் தெரிவிக்கையில்,

200 வருட வரலாற்றை கொண்ட 11 மாவட்டங்களில் பரவலாக காணப்படும் மலையக மக்களின் வாழ்வியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மலையக்தை கிராமமாக மாற்றும் வேலை திட்டம் காலத்திற்க்கு ஏற்ற சரியான தீர்மானமாகும். பெருந்தோட்டங்களை பொருத்தமட்டில் குடியிருப்புகளை விஸ்தரிப்பதற்கும், நீர் மற்றும் மின்சார இணைப்புகளை பெற்றுக்கொள்வதற்கும் தோட்ட முகாமையிடம் அனுமதி பெற வேண்டிய நிலைமையே காணப்படுகிறது. இவ்வாறு பெருந்தோட்டங்கள் கம்பனிகளின் கைப்பிடிக்குள் மட்டும் சிக்கித் தவித்தது போதும்.

இந்த திட்டத்தில் ஒரு சில மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டி உள்ளது. ஆகவே எதிர்க்கட்சி ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் சட்ட ஆலோசகர்களையும் உடன் இணைத்து கொண்டு உபக்குழு ஒன்றை அமைத்து நிறை குறைகளை ஆராய்ந்து உடனடியாக இந்த வேலை திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். எதிர்வரும் 22ஆம் திகதி இக்குழு அதன் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். ஜனாதிபதியின் அமைச்சரவை தீர்மானத்துக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் முழுமையான ஆதரவை வழங்கும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை திணைக்கள உயர் பதவிகளில் இன சமத்துவம் பேணப்பட வேண்டும்

## கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம்

கல்முனை, ஜூலை 18

**இலங்கை பரீட்சை திணைக்களத்தில் பணியாற்ற வேண்டிய கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் பதவி நியமனங்களில் இன சமத்துவம் பேணப்பட வேண்டும் என்று கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கத்தின் செயலாளர் ஏ. எல். எம். முக்தார், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

பரீட்சை திணைக்களத்தில் உள்ள நிறைவேற்றுத்தர பதவிகளான பரீட்சை ஆணையாளர் நாயகம், மேலதிக பரீட்சை ஆணையாளர் நாயகம், பிரதிப் பரீட்சை ஆணையாளர், உதவி ஆணையாளர் ஆகிய பதவிகளில் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ள முஸ்லிம் அதிகாரிகள் எவரும் நியமிக்கப்படாத குறை நீண்ட காலமாக நிலவி வருகிறது.

பரீட்சை திணைக்களத்தின் தற்போதைய கட்டமைப்பில் தமிழ் மற்றும் சிங்கள அதிகாரிகள் மாத்திரமே மேற்படி பதவிகளில் கடமையாற்றி வருகின்றனர்.

கடந்த காலங்களில் மேலதிக பரீட்சை ஆணையாளர் நாயகம், பிரதிப் பரீட்சை ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகிய பதவிகளில் முஸ்லிம் அதிகாரிகள் கடமையாற்றி வந்துள்ளனர்.

இறுதியாக ஏ. எஸ். முகமட் என்ற கல்வி நிர்வாக சேவை அதிகாரி, பிரதிப் பரீட்சை ஆணையாளராக கடமையாற்றி 2018 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற பின்னர் எந்தவொரு முஸ்லிம் அதிகாரியும் நியமனம் செய்யப்படவில்லை.

2007 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட முஸ்லிம் அதிகாரிகள் ஒருவராவது பரீட்சை திணைக்களத்துக்கு நியமனம் செய்யப்படவில்லை.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட தடை செய்யப்பட்டதொரு அரச நிறுவனமாக இலங்கை பரீட்சை திணைக்களம் மாறி உள்ளதா? எனும் சந்தேகம் முஸ்லிம் கல்வியாளர்களால் நோக்கப்படுகிறது.

இந்த நிலையில், பரீட்சை திணைக்களத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த முஸ்லிம் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று தமது சங்கம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தை வலியுறுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)





# மட்டக்களப்பு மகாஜன கல்லூரியில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள்

மட்டக்களப்பு, ஜூலை 18

மட்டக்களப்பு மகாஜனா கல்லூரி பெண்கள் தேசிய பாடசாலையின் 149 ஆவது ஆண்டை சிறப்பிக்கும் முகமாக மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி ராஜகுமாரி கனகசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

பழைய மாணவர்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி, கரப்பந்தாட்டம், கயிறு இழுத்தல் போட்டிகள் மற்றும் பழைய மாணவர்களின் நடனங்கள், தெரு நாடகம் ஆகியனவும் அனைவரதும் கவனத்தை ஈர்த்தன.

இதன்போது, பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலையின் ஆசிரியர்கள், பாடசாலை மாணவிகள், பாடசாலையின் பழைய மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(எ)

# "அந்த கல்முனைக்குடி நாட்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா

கல்முனை, ஜூலை 18

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பரின் "அந்த கல்முனைக் குடி நாட்கள்" எனும் கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப லோட்டஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விசேட விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், ஓய்வு பெற்ற வெளிநாட்டு அமைச்சின் அதிகாரியும் இலங்கைக்கான முன்னாள் தூதுவருமான எச். ஏ. அஸீஸ், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



# 7 சிறுவர் இல்லங்களுக்கு உலர் உணவு பொருட்கள்

அம்பாறை, ஜூலை 18

கிறிசாலிஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 7 சிறுவர் இல்லங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் காகி தாதிகள், சுகாதார பொருட்கள் என்பன காரைதீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கமைவாக உதவி பிரதேச செயலாளர் தலைமையில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் கலந்து கொண்டு பொருட்களை வழங்கி வைத்தார்.

இதன்போது அம்பாறை மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் யூ. எல். அசார்டீன், அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர் ஐ. எல். எம். இர்பான் மற்றும் சிறுவர் இல்ல முகாமையாளர்களும் கலந்து கொண்டனர்.

(எ)

# ஆங்கிலம் கற்றல், கற்பித்தலை மேம்படுத்த கலந்துரையாடல்

அம்பாறை, ஜூலை 18

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் ஆங்கில மொழி கற்றல் மற்றும் கற்பித்தலை மேம்படுத்துவது குறித்து தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.



அவுஸ்திரேலியாவின் மைக்ரோ - டெவலப்மென்ட் இன்க்கின் பங்காளர்களுள் ஒருவரான கலாநிதி டோனா வாகன், தென்கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் கலை மற்றும் கலாசார பீடத்தின் கல்வியாளர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

ஆங்கில எழுத்தறிவு திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கலை கலாசார பிரிவின் பீடாதிபதி, ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் தலைவர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பங்கேற்றனர்.

அத்தோடு, அம்பாறை பிரதேசம் முழுவதிலும் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் ஆங்கில மொழி கற்றல் மற்றும் கற்பித்தலை மேம்படுத்துவது குறித்து கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டது.

(எ)

# மாகாண மட்டத்துக்குத் தெரிவான மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு

கல்முனை, ஜூலை 18

கல்முனை வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டி மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மெய்வல்லுநர் வீரர்கள் மற்றும் 16 வயதுக்குட்பட்ட பட்மிண்டன் அணியினர் ஆகியோரை பாராட்டி, பதக்கம் அணிவித்து கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலை அதிபர் அப்துல் றஸாக் தலைமையில் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.



(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலக்கரி சுரங்கம் இடிந்து விபத்து



பெஷாவர், ஜூலை 18

பாகிஸ்தான், பெஷாவர் நகரிலிருந்து 35 கிலோ மீற்றர் தொலைவில் தென் மேற்கு தர்ரா ஆதம் கேல் நகரில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இதில் தொழிலாளர் கள் பணியாற்றி வந்த நிலையில், திடீரென விபத்து ஏற்பட்டது. சுரங்கத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்ததில் தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும், அவசரகால பொறுப்பு படையினர் உடனடியாக அந்தப் பகுதிக்குச் சென்றனர். சுரங்கத்தில் இருந்து 3 பேரின் உடல்களை மீட்டனர். காயமடைந்த 4 பேரை மீட்டு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

# ட்ரம்பை கொலை செய்ய ஈரான் சதி அமெரிக்க ஊடகம் பரபரப்பு செய்தி

வாஷிங்டன், ஜூலை 18

**அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை படுகொலை செய்ய ஈரான் சதித் திட்டம் தீட்டியிருந்தது குறித்து துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பே அமெரிக்காவுக்கு இரகசிய தகவல் கிடைத்ததாக சி. என். என். ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**



அந்தச் செய்தியில், "ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே அமெரிக்க அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் வந்துள்ளது. அதில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பை படுகொலை செய்ய ஈரான் சதித் திட்டம் தீட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது".

இருப்பினும், தாக்குதலில் ஈடுபட்ட 20 வயது தாமஸ் மத்தியூ க்ரூக்ஸூக்கும் ஈரானிய சதிக்கும் நேரடி தொடர்பு இருக்கிறதா? என்பது இன்னும் தெரியவில்லை என அந்தச் செய்தியில் கூறப்படுள்ளது.

இதற்கிடையில் சதி குற்றச்சாட்டை ஈரான் திட்டவட்டமாக மறுத்துள்ளது. இது ஆதாரமற்ற, ஈரானுக்கு களங்கம் விளைவிக்கும் குற்றச்சாட்டு என்று தெரிவித்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டு குறித்து ஐ.நாவுக்கான ஈரானின் செய்தித் தொடர்பாளர், "ஈரான் நாட்டின் பார்வையில் ட்ரம்ப் ஒரு குற்றவாளி. ஜெனரல் சுலைமானியின் படுகொலைக்காக அவர் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர். ஈரான் ட்ரம்பை சட்டத்தின் வழியில் சந்திக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

ஈரான் இராணுவத் தளபதி காசிம் சுலைமானி படுகொலைக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார். அதிலிருந்தே ட்ரம்புக்கு ஈரானால் அச்சுறுத்தல் இருக்கிறது என்று அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர். (எ)


## எண்ணெய் கப்பல் கடலில் கவிழ்ந்தது

ஏடன், ஜூலை 18

ஓமன் நாட்டின் கடலோர பகுதியில் துகம் என்ற துறைமுக நகர் உள்ளது. அங்கு எண்ணெய் மற்றும் எரிவாயு சுரங்கத் தொழில்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், இந்த நகர ருகே ராஸ் மத்ரகா என்ற இடத் திலிருந்து தென்கிழக்கே 25 கடல் மைல்கள் தொலைவில் எண்ணெய் கப்பல் ஒன்று திடீ ரென கவிழ்ந்தது.

இதுபற்றி ஓமனின் கடல் வழி பாதுகாப்பு மையம் வெளியிட்ட செய்தியில், இந்தக் கப்பலில் 13 இந்தியர்கள் உட்பட 16 பேர் பயணித்துள்ளனர். மற்ற 3 பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்தக் கப்பல் ஏமன் நாட்டின் துறைமுக நகரான ஏடன் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

பிரெஸ்டீஜ் பால்கன் என்ற பெயரிடப்பட்ட கோமரோஸ் நாட்டின் கொடியுடன் கூடிய அந்த எண்ணெய் கப்பல் கவிழ்ந்ததில், காணாமல் போனவர்களைத் தேடும் மற்றும் மீட்கும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. (எ)



# இடஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம்

டாக்கா, ஜூலை 18

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டை எதிர்த்து நடந்த போராட்டத்தின்போது மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். இதனால் 6 பேர் பலியாகினர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் இருந்த பங்களாதேஷ் கடந்த 1971 இல் தனி நாடாக சுதந்திரம் பெற்றது. இந்த சுதந்திர போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் தங்களது உயிரை தியாகம் செய்தனர். எனவே சுதந்திர போராட்ட தியாகிகளை போற்றும் வகையில் அவர்களது குடும்பத்தினருக்கு அரசு வேலைவாய்ப்புகளில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால், இந்த படைவீரர் இடஒதுக்கீடு முறை பாரபட்சமாக உள்ளது என ஏனைய மாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். எனவே, உரிய தகுதி அடிப்படையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டுமென அவர்கள் வலியுறுத்தி வந்தனர். நீதிமன்ற உத்தரவின்படி இந்த படைவீரர் இடஒதுக்கீடு முறை நிறுத்தப்பட்டது. இதனை எதிர்த்து அரசாங்கம் உயர் நீதிமன்றில் வழக்கு தொடுத்தது. அப்போது நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து தலைநகர் டாக்காவில் உள்ள ஜகாங்கீர் நகர் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் போராட்டம் நடத்தினர். அதேசமயம் ஆளும் அவாமி லீக் கட்சியின் மாணவர் பிரிவைச் சேர்ந்தவர்கள் இந்தப் போராட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

அப்போது இரு தரப்பினருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. எனவே அவர்கள் கட்டை மற்றும் கற்களால் மாறிமாறி தாக்கிக்கொண்டனர். இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு வீசி மாணவர்களை கலைந்து போகச் செய்தனர். இந்த வன்முறையில் 6 மாணவர்கள் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் பொலிஸார் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

இந்தப் போராட்டத்தின் எதிரொலியாக நாடு முழுவதும் உள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை காலவரையின்றி மூட அரசு உத்தரவிட்டுள்ளது. (எ)

# போராட்டக்காரர்களின் தாக்குதலில் 70 பேர் பலி

கின்ஷாசா, ஜூலை 18

கொங்கோவில் போராட்டக்காரர்களின் தாக்குதலில் சிக்கி 9 இராணுவத்தினர் உட்பட 70 பேர் பலியாகினர்.



கொங்கோ தலைநகர் கின்ஷாசாவில் உள்ள கின்செல் கிராமத்தில் கடந்த சில ஆண்டுகளாக இரண்டு இனக் குழுக்களுக்கு இடையே மோதல் நடந்து வருகிறது. நில உரிமைகள் மற்றும் அப்பகுதியின் வரலாற்று குடிமக்கள் மற்றும் கொங்கோ ஆற்றின் அருகே குடியேறிய யக்கா உள்ளிட்ட பல்வேறு இனங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இடையே நில உரிமைகள் தொடர்பில் பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் கொங்கோவின் ஜனாதிபதி பெலிக்ஸ் சிசெகெடி முன்னிலையில் போர் நிறுத்தம் ஒப்புக் கொள்ளப்பட்டபோதிலும், இரு சமூகங்களுக்கிடையில் மோதல்கள் தொடர்ந்து தீவிரமடைந்துள்ளன. கொங்கோ இராணுவம் வன்முறையை அடக்குவதில் தோல்வியடைந்தது. இதனையடுத்து கொங்கோ கிழக்கில் போராளிகள் ஆயுதங்களுடன் போரிட்டு வரும் நிலையில், நாட்டின் மேற்கு பகுதியிலும் வன்முறை தீவிரமடைந்துள்ளது. இந்தத் தாக்குதலில் 9 இராணுவ வீரர்கள் உட்பட 70 பேர் உயிரிழந்தனர். இந்தப் பகுதியில் வன்முறையைக் கட்டுப்படுத்த இராணுவம் போராடி வருகிறது. (எ)

# நிலவில் குகை கண்டுபிடிப்பு

ரோம், ஜூலை 18

55 ஆண்டுகளுக்கு முன்பு நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் பஸ் ஆல்ட்ரின் ஆகியோர் நிலவில் தரையிறங்கிய இடத்திலிருந்து சற்று தொலைவில் குகை ஒன்று இருப்பதை விஞ்ஞானிகள் தற்போது உறுதி செய்துள்ளனர். இந்தக் குகையானது எதிர்காலத்தில் விண்வெளிக்கு செல்லும் நூற்றுக்கணக்கான வீரர்கள் தங்கி ஆய்வுசெய்ய வசதியாக இருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இத்தாலி நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தலைமையிலான குழுவினர் நடத்திய ஆய்வில், நிலவில் குகை இருப்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, இந்த குகை குறைந்தபட்சம் 130 அடி (40 மீற்றர்) அகலமும், பலநூறு மீற்றர் நீளமும் இருக்கலாம்



என்று அவர்கள் மதிப்பிட்டுள்ளனர். நிலவில் அமைந்துள்ள இந்தக் குகைகள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு மர்மமாகவே இருப்பதாகவும், மேலும் நிலவில் அமைந்துள்ள பள்ளங்கள் குடிநீரையும், ரொக்கெட் எரிபொருளையும் வழங்கக்கூடிய உறைந்த நீரை வைத்திருப்பதாக நம்பப்படுவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே நிலவில் நூற்றுக்கணக்கான குழிகள் மற்றும் ஆயிரக்கணக்கான எரிமலைக் குழாய்கள் இருக்கலாம் என்று கண்டுபிடிப்புகள் தெரிவித்திருந்தன. அத்தகைய இடங்கள் விண்வெளி வீரர்களுக்கு இயற்கையான தங்குமிடமாக செயல்படும். அவை காஸ்மிக் கதிர்கள் மற்றும் சூரிய கதிர்வீச்சு மற்றும் மைக்ரோ - விண்கல் தாக்குதல்களில் இருந்து விண்வெளி வீரர்களை பாதுகாக்கும் என்று விஞ்ஞானிகளின் ஆய்வின் மூலம் நம்பப்படுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெலிஞ்சிமுனையில் அமைக்கப்படும் கடலட்டைப் பண்ணையால் பாதிப்பு!

## பிரதேச செயலாளருக்கு மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

**கடலட்டை பண்ணையால் தாம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து தீவக மீனவர்களால் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.**

சட்ட விரோதமாக மெலிஞ்சிமுனைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும்கடலட்டை பண்ணைகளால் தமக்கு தொழில் பாதிப்பு ஏற்படுவதாக இவ்விடயம் தொடர்பாக வேலணை அம்பிகை நகர் கடற்றொழிலாளர் சங்கம், மெலிஞ்சிமுனை கடற்றொழிலாளர் சங்கம், தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்கம், சின்னமடு கடற்றொழிலாளர் சங்கம் போன்ற சங்கங்கள் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றை வழங்கியுள்ளன.

இதனால் வாழ்வாதார தொழில் அழிக்கப்படுகிறது. கடற்றொழிலுக்கு செல்லும் பாதைகள் கடல் அட்டைப் பண்ணையால் மறைத்து அடைக்கப்படுவதாலும் சிறு கடல் தொழில் செய்யும் மீனவர்கள் தான் பாதிப்படைகின்றோம்.

எனவே இந்த கடல் அட்டை பண்ணையை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சுதந்திரக் கட்சி வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

## கூறுகிறார் மைத்திரிபால

கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் முன்நிறுத்தப்படவுள்ளதாகவும் அதற்கான வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்ச்சியின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடத்தப்படவேண்டும் எனவும் அதனை எந்த வகையிலும் ஒத்திவைக்க முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும் தேர்தலை பிற்போட முயற்சித்தால் நாட்டில் ஆயிரமாயிரம் இரத்தக்களரிகள் ஏற்படலாம் எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

(அ)

# 1350 ரூபா சம்பளத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது

## செந்தில் தொண்டமான் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 18

1700 ரூபா சம்பளத்துக்கு பதிலாக 1350 ரூபா சம்பளத்தை வழங்குவதாக எழுத்து மூலம் உறுதியளித்த முதலாளிமார் சம்மேளனத்தின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள உயர்வை வழங்க முதலாளிமார் சம்மேளனம் தொடர்ச்சியாக மறுப்பை வெளியிட்டு வருகின்ற நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் 1700 ரூபா சம்பளத்தை வலியுறுத்தி பெருந்தோட்டங்கள் முழுவதும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர்களின் இந்த நியாயமான கோரிக்கைக்கு செவிசாய்க்காது தான்தோன்றித்தனமாக கம்பனிகள் செயல்படுவதுடன், 1200 அடிப்படை சம்பளமும், 80 வீதம் பணியில் ஈடுபட்டால் 150 ரூபா கொடுப்பனவுடன் 1350 ரூபாவை மாத்திரமே வழங்க முடியும் என கூறுகின்றன.

இதேவேளை கம்பனிகளின் இந்தப் போக்கை இ.தொ.கா வன்மையாக கண்டிக்கிறது எனவும், கம்பனிகள் தொழில் அமைச்சுக்கு சமர்ப்பித்த முன்மொழிவை இ.தொ.கா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது எனவும் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

மேலும் இந்நிலை தொடருமானால் பெருந்தோட்டங்கள் முழுவதும் 1700 ரூபா சம்பளத்தை வலியுறுத்திக் கடுமையான போராட்டங்கள் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# தேர்தலுக்கு நாங்களும் தயார் ரணில் போட்டியிடத் தயாரா?

## கேட்கிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்களும் தயார் தேர்தல்கள் ஆணைக்குழுவும் தயார். தேர்தலில் போட்டியிடத் தயாரா என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கவேண்டும். தேர்தலை பிற்போடும் யோசனைகளை அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்தால் அதற்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவினர் தேர்தல்கள் ஆணையாளரை நேற்று முன் தினம் சந்தித்துப் பேசினர். இதன் பின்னர், ஊடகங்களிடம் பேசியபோதே நாமல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல்களுக்கான அறிவிப்பு விடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றவுடன் கட்சியின் அரசியல் செயல்பாடுகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் பேச்சில் ஈடுபடுவது எமது அரசியல் கொள்கையாகும். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசமைப்பின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் இரத்து செய்யப்பட்டு 20 ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டு அதனூடாக ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு அவர் பதவி விலகி பாராளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு, 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ள பின்னணியில் 19 ஆவது திருத்தத்தை சவாலுக்குட்படுத்தி ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளா அல்லது ஆறு ஆண்டுகளா என்று தர்க்கங்களை முன்வைப்பது பயனற்றது. ஆகவே அரசமைப்பின் பிரகாரம் இனி தேர்தலுக்கு தயாராக வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு நாங்களும் தயார், தேர்தல்கள் ஆணைக்குழுவும் தயார் ஆகவே தேர்தலுக்கு தயாரா, இல்லையா என்பதை ஜனாதிபதி அறிவிக்க வேண்டும். தேர்தலை பிற்போடும் வகையில் அரசாங்கம் ஏதேனும் யோசனைகளை பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்தால் அதற்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம் - என்றார்.

(ஐ)

# அனுரகுமார திஸாநாயகாவுக்கும் ட்ரம்பின் நிலைமை ஏற்படலாம்!

## வாகமுல்லே உதித்த தேரர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 18

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயகாவுக்கும் டொனால்ட் ட்ரம்பின் நிலை ஏற்படலாம் என்பதால் அவரது பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என தேசிய பிக்குகள் முன்னனியின் அழைப்பாளர் வாகமுல்லே உதித்த தேரர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியினால் கண்டியில் நடைபெற்ற கட்சியின் மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே உதித்த தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளராகக் களமிறங்கும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதே நிலைமை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயகாவுக்கும் ஏற்படலாம். எனவே அவரது பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும்.

மேலும் அனுரகுமார திஸாநாயக்க பொதுவெளியில் தோன்றாமல் உரைகளை ஆற்றவேண்டும். இந்த ஊழல் அரசியல்வாதிகள் அதிகாரத்திற்காக எந்த இரக்கமற்ற செயல்களையும் செய்வார்கள் என்பதால் அவரது பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# நாட்டுக்காக நாம் அர்ப்பணித்து செயலாற்ற முன்வரவேண்டும்!

## சொல்கிறார் பிள்ளையான்

மட்டக்களப்பு, ஜூலை 18

நாட்டுக்காக நாங்கள் அர்ப்பணித்து செயலாற்ற முன்வர வேண்டும். இல்லையென்றால் முன்னெடுக்கும் கடையடைப்பும் போராட்டங்களும் எதிர்கால குழந்தைகளையே பாதிக்கும் என இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

சந்திரகாந்தனின் 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், மட்டக்களப்பு, கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட புதிய நுழைவாயில் திறப்பு விழா மற்றும் பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்யும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாங்கள் அனைவரும் திட்டமிட்டு சரியாக செயலாற்றினால் அடுத்த ஐந்து வருடங்களில் அனைவருக்கும் உயர்ச்சியும் சம்பள அதிகரிப்புகளும் முக்கியமாக இளைஞர் - யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகளையும் உருவாக்கிக்கொள்ள முடியும்.

அனுபவம் இல்லாதவர்களின் கதைகளை கேட்டு அரசாங்கத்தின் கொள்கையை சரியாக மதித்து நடக்கத் தவறினால் நாடு மீண்டும் நெருக்கடி நிலையை எதிர்கொள்ளும். அறிவுபூர்வமான வகையில் ஆசிரிய சங்கம் உட்பட தொழிற் சங்கங்கள் தீர்மானங்களை எடுத்து அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# மூன்று இலங்கையர் உட்பட 16 பணியாளர்கள் மாயம்!

கொழும்பு, ஜூலை 18

ஓமான் கடற்பகுதியில் எண்ணெய் கப்பல் மூழ்கியதில் மூன்று இலங்கை பிரஜைகள் உட்பட 16 பணியாளர்கள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மையத்தில் உள்ள ராஸ் மத்ரகாவின் தென்கிழக்கில் கொமரோஸ் கொடியுடன் கூடிய எண்ணெய் கப்பல் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் நடந்து வருவதாக கடல்சார் பாதுகாப்பு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த கப்பலில், 13 இந்திய பிரஜைகள் மற்றும் மூன்று இலங்கையர்கள் உள்ளிட்ட 16 பணியாளர்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில்...

குழுவும் இந்தக் கூட்டணியில் இணையவுள்ளனர்.

இவர்கள் தவிர, ஆளும் தரப்பாக உள்ள பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் குழுவும் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டணியில் இணைய உத்தரவாதம் அளித்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்வேறு தரப்புகளை சேர்ந்து அமைக்கப்படும் புதிய மெகா கூட்டணியின் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலை ரணில் விக்கிரமசிங்க சந்திப்பார். இதற்கான கூட்டணி எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## உரிய...

கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பது தொடர்பான அறிவிப்பை வெளியிடுவோம் . ஜனாதிபதித் தேர்தலை வெற்றிக்கொள்ளும் வேலைத் திட்டம் எம்மிடம் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் நாம் வெற்றி பெறுவோம் என்பதே மக்களுக்கு கூறவேண்டிய நற்செய்தி.

"உரிய நேரம் வரும் போது எமது வேட்பாளர் யார் என்பதையும் அறிவிப்போம். மிகவும் பலம்வாய்ந்த ஒரு வேட்பாளரை நாம் முன்னிறுத்த உள்ளோம். ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் நாம் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை. ஏனையவர்களின் ஒத்துழைப்புடனேயே வேட்பாளரை நிறுத்துவோம். நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொது வேட்பாளர் ஒருவரையே நிறுத்தினோம். தேர்தலின் பின்னர் எமது அரசாங்கமே அமையும்." - என்றும் கூறினார். (ஐ)

## தமிழரின்...

நியாயப்படுத்த முடியாத திட்டங்களுக்கான செலவினங்கள், அரசியல் அதிகாரத்தை அனுபவித்தவர்களை கட்டுப்படுத்துவதற்கான - தடுப்பதற்கான உரிய ஏற்பாடுகள் இல்லாதமையே நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குக் காரணம்.

வலுவான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும். வல்லமைக்கு மேலான ஜனாதிபதி முறை ஏனைய ஜனநாயக நிறுவனங்களை செயலிழக்க செய்கின்றது. கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தல்களில் அநேக வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக வாக்குறுதியளித்ததையும் தேர்தலில் வென்ற பின்னர் அதனை மறந்துவிடுவதையும் அவதானித்துள்ளோம். நிறைவேற்று அதிகார முறையை நீக்குவது குறித்து அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும்.

தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் காணப்பட்டமையே நாட்டில் யுத்தத்துக்கும் இனக்குழுக்கள் மத்தியில் ஏற்பட்ட துருவயமப்படுத்தலுக்கும் காரணம். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் ரீதியிலான பிரச்னைகள், அவர்கள் எதிர்கொண்ட பாரபட்சங்கள் என்பவற்றுக்கு அரசியல் வழியிலேயே தீர்வு காணலாம். அரசியல் தீர்வு என்பது ஐக்கியமான தேசம் என்ற கட்டமைப்புக்குள் வடக்கு, கிழக்கை ஒரு தேசமாக கருதுவதுடன், குறிப்பிடத்தக்க சுயாட்சி, அதிகாரப் பகிர்வு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## வெளியேறிய...

தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் ஆயிரத்து 300 மருத்துவர்களும் 500இற்கு மேற்பட்ட தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். நாட்டில் தற்போது 24 ஆயிரம் அரச மருத்துவர்கள் இருக்கிறார்கள். வெகுவிரைவில் 3 ஆயிரத்து 500 பேர் மருத்துவர்களாக வெளியேறவுள்ள நிலையில் அவர்களுக்கான நியமனங்கள் விரைவில் வழங்கப்படும். ஒவ்வோர் ஆண்டும் 3 ஆயிரம் பேர் மருத்துவர்களாகின்றனர். இதனால் அரச மருத்துவமனைகளில் நிலவும் மருத்துவர் வெற்றிடங்களை நிரப்பக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது 24 ஆயிரம் மருத்துவர்கள் பணிபுரிகின்றபோதிலும் துறைசார்ந்த மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியமை பெரும் பிரச்னையாக உள்ளது. துறைசார்ந்த மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையால் நாட்டின் சில இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும், கடந்த சில மாதங்களில் நாட்டை விட்டு வெளியேறிய 10 முதல் 15 வரையான மருத்துவர்கள் நாட்டுக்கு நாட்டுக்கு மீளவும் வந்துள்ளனர். அவர்கள் மருத்துவ பணியில் ஈடுபட்டுள்ளனர். இது எமக்கு நல்ல ஆரோக்கியமான விடயம் - என்றார். (ஐ)

## குழப்பம்...

உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர், சுகா தார துறை உயரதிகாரிகள், மருத்துவர்களின் பங்கேற்புடன் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அநாமதேயமாக பங் கேற்ற ஒருவர் கலந்துரை யாடலை முகநூல் வழி யாக நேரலையில் ஒளி பரப்பினார். அவரை அவ் வாறு செய்ய வேண்டாம் என்றும் அங்கிருந்து வெளியேறுமாறும் அதிகாரிகள் தெரிவிக்கவே, வெளியேற மறுத்த அவர் தொடர்ந்து அங்கேயே இருந்தார்.

கூட்டம் நிறைவில் சுகாதார அமைச்சருடன் பேச முற்பட்ட நிலையில் அமைச்சர் அங்கிருந்து செல்லவே கூட்டத்தில் நின்ற அதிகாரிகளுடன் குழப்பத்தில் ஈடுபட்டார்.

இதனைத் தொடர்ந்து சத்தமிட்டவாறே ஆளுநர் மற்றும் அதிகாரிகள் கலந்துரையாடிய பிரதம செயலர் பணிமனையில் முரண்பாட்டில் ஈடுபட்டார். அதிகாரிகள் வெளியேறக் கூறியும் முரண்பாட்டில் ஈடுபட்டார்.

இதைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. அங்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் குழப்பத்தில் ஈடுபட்ட நபரை கைது செய்தனர்.

சந்தேக நபரை தடுத்துவைத்துள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஐ)

## தேர்தலை...

ஊடாக ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலைக் காலந்தாழ்த்துவதானது சமூக அமைதிக்கும் இலங்கை தொடர்பில் சர்வதேசத்தின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் நன்மதிப்புக்கும் குந்தகம் விளைவிப்பதாகவே அமையும். வன்முறைகளோ, குழப்பங்களோ அற்ற சுயாதீனமான தேர்தலை நடத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுக்கும் என்று நம்புகிறேன் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)



# ஜனாதிபதி புலமைப்பரிசில் மன்னாரில் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் மன்னார் மாவட்டத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று புதன்கிழமை இரு பிரிவுகளாக மன்னார் நகர மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நாடு முழுவதும் உள்ள வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் மன்னார், மடு ஆகிய இரு கல்வி வலயங்களையும் உள்ளடக்கி 830 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மன்னார் கல்வி வலயத்தில் 428 மாணவர்களும் மடு கல்வி வலயத்தில் 402 மாணவர்களும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதி புலமைப் பரிசில் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# அரச அச்சகத்தின் பாதுகாப்புக்கு நாளாந்தம் 65 பொலிஸார் தேவை!

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சிடும் பணிகளின் பாதுகாப்புக்காக நாளாந்தம் 65 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர் என்று அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, வாக்குச்சீட்டு அச்சிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். அதுமுதல் பொலிஸ் பாதுகாப்பு தேவைப்படும் என்று அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

தேர்தல்கள் ஆணைக்குழு ஊடாக பொலிஸாருக்கு தெளிவுபடுத்தியுள்ளதுடன், தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரச அச்சகர் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஒற்றுமையை...

விரும்பக்கூடிய வாக்குகளை பெறாவிட்டால் அது பாதிப்பு என நினைக்கிறார்கள். கட்சிகள் ஒற்றுமையாக இருக்கின்றன. கட்சிகள் ஒற்றுமையாக சொல்வதை மக்கள் கேட்கிறார்கள் என வெளிநாடுகள் நம்பும்நிலை வரும் - ஒற்றுமையை காட்ட வேண்டும்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாகூட அதன் முக்கியத்துவம் தொடர்பில் கூறியுள்ளார். புதிதாக தெரிவு செய்யப்படட தலைவர் சிறீதரன்கூட அது சரியென சொல்லியுள்ளார். இப்படியாக தமிழ் அரசுக் கட்சியில் இருககக்கூடிய பலர் ஒத்துக் கொள்கிறார்கள்.

இப்படியாக எல்லோரும் ஒற்றுமையாக வரக்கூடிய ஒரு நிலையில், நாம் எமது பலத்தை காட்டக்கூடியதாக இருக்கும். ஒற்றுமையை காட்டுவதன் மூலம் நாம் உலக நாடுகளிடையே எமது சரியான நிலைப்பாட்டை காட்டக்கூடியதாக இருக்கும். அதற்காகவே இந்த முயற்சியை செய்கிறோம் - என்றார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். (ஐ)

# போதைப்பொருளுடன் ஒருவர் கைதானார்!

கொழும்பு, ஜூலை 18

ஹெரோயின் போதைப் பொருள் ,கஞ்சா போதைப் பொருள் மற்றும் துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் இரண்டு ரவைகள் ஆகியவற்றுடன் சந் தேக நபர் ஒருவர் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை தனமல்வில சர்வோதய மாவத்தையில் கைது செய்யப் பட்டதாக தனமல்வில பொலி ஸார் தெரிவித்தனர்.

சர்வோதய வீதி தனமல்வில பகுதியைச் சேர்ந்த 35 வயது டைய நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனமல்வில பொலிஸ் அதி காரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் மேற்கொண்டபோது 6670 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 40 கிராம் கஞ்சா போதைப்பொ ருள் மற்றும் துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் இரண்டு ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர்.

விசாரணையின் பின்னர் சந்தேக நபரை வெல்லவாய நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர். (அ)

## ஜனாதிபதி...

ஒருவரை நியமிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை கருத்தில் கொண்டு வேட்பாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்துங்கள்!

## தேர்தல் ஆணைக்குழுவிடம் ஐ.தே.கவும் கோருகின்றது



கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்துமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.


தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுடன் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி அல்லது பொதுஜன பெரமுனவில் போட்டியிடுவாரா என கேள்வி எழுப்பப்பட்டதையடுத்து, ஜனாதிபதி சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவார் என அவர் பதிலளித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்ததன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளரை விரைவில் அறிவிக்கும் என பாலித ரங்கே பண்டார கூறினார். (அ)

# மின்சாரக் கட்டணத்தை மேலும் குறைக்கமுடியும்!

## அமைச்சர் காஞ்சன கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 18

மின்சாரம் மற்றும் எரிபொருளின் விலைகளைப் பாரியளவில் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், மூன்று ஆண்டுகளில் மின் கட்டணத்தை மேலும் குறைக்க முடியும் எனவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனை கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை, ஒக்ரோபர் மாதங்களில் மின் கட்டணம் திருத்தப்படவேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பின்னர், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில், ஏப்ரல் மாதத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் ஜூலை மாதம் திருத்தம் செய்ய இணக்கம் காணப்பட்டது.

இந்த மின் கட்டணத் திருத்தம் நேற்றில் இருந்து அமுலுக்கு வந்துள்ளது. அடுத்த கட்டணத் திருத்த முன்மொழிவை ஒக்ரோபர் மாதத்தில் வெளியிட எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த இரண்டு வருடங்களைப் பொறுத்தவரை, மழை வீழ்ச்சியும் அதிகரித்துள்ளது.

அதனால், நீர் மின் உற்பத்தி அதிகரித்தது. மேலும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியும் அதிகரித்துள்ளது. மின் உற்பத்திச் செலவைக் குறைத்தால் எதிர்காலத்தில் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும்.

அதற்கு குறைந்த செலவில் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய மின் உற்பத்தி நிலையங்களை விரைவாக அமைக்க வேண்டும். இந்தப் புதிய மின் உற்பத்தி நிலையங்களை அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நிர்மாணித்து அதனை நிறைவு செய்யவும் எதிர்பார்க்கின்றோம்-என்றார். (அ)

# இலத்திரனியல் அடையாள அட்டை அடுத்த மாதம் முதல் அறிமுகமாகும்

கொழும்பு, ஜூலை 18

அடுத்த மாதம் முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்தவுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டையை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் மோசடிகள், இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகத்தின் பின்னர் இடம்பெறாதென ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

புதிய அடையாள அட்டையில் கைவிரல் அடையாளம் உள்ளடக்கப்பட்டுள்ளது. (அ)

# சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவார் ரணில்

கொழும்பு, ஜூலை 18

ஜனாதிபதி தேர்தலில் சுயாதீன வேட்பாளராக புதிய ஒரு அடையாளத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது காணப்படுவது அரசியல் பிரச்னை அல்ல, பொருளாதார பிரச்னை எனவும், அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க சிலரால் முடிந்தாலும், பொருளாதார பிரச்னைகளுக்கு தீர்வு வழங்க நாட்டில் உள்ள ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க எனவும் அவர் கூறினார்.

வீழ்ந்து கிடந்த நாட்டை ஒரு அளவுக்கு கட்டியெழுப்பி முன்னோக்கி கொண்டு செல்ல ஜனாதிபதி நடவடிக்கை முன்னெடுத்து வருவதாகவும், பொதுமக்கள் அதனை புரிந்துக்கொண்டு தற்போதைய ஜனாதிபதியையே வருங்கால ஜனாதிபதியாக பதவி வகிப்பதில் பொறுப்பேற்கவேண்டும் என தெரிவித்த அவர், பொதுமக்கள் தவறான ஒரு தீர்மானத்தை எடுத்து நாட்டை மீண்டும் பொருளாதார ரீதியில் வீழ்ந்த பின்னர் வருந்தப்படுவதில் பயனில்லை என வலியுறுத்தினார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஒரு சிலர் தயாராக இருந்தாலும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் வழிமுறைகள் அறிந்த ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே எனவும் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். (அ)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் தற்போது உள்ளவரே!

## சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண

கொழும்பு, ஜூலை 18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் தற்போது உள்ளவரே என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே சுகாதார அமைச்சர் இதனை கூறினார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் தற்போது நியமனம் பெற்று கடமையில் இருக்கும் அதிகாரியே வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் என அமைச்சர் கூறினார். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் நேற்று விஜயம்!

## என்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் திறப்பு

கொழும்பு, ஜூலை 18

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று புதன்கிழமை விஜயம் செய்தனர்.

இதன்போது, யாழ். போதனா வைத்தியசாலையில் என்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் சுகாதார அமைச்சரால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலை விடுதிகள், சத்திர சிகிச்சை பிரிவுகளையும் போதனா வைத்தியசாலையின் அரும்பொருட்காட்சியகத்தையும் அமைச்சர் குழுவினர் பார்வையிட்டனர்.



அத்தோடு, குருதி மாற்றுச் சிகிச்சைக்கான உபகரணம் ஒன்றையும் சுகாதார அமைச்சர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கியதுடன் ஞாபகார்த்தமாக மரக்கன்றையும் நாட்டி வைத்தார்.




அமைச்சரின் இந்த விஜயத்தின்போது சுகாதார அமைச்சின் செயலாளர் மஹிபால மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன, பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கயன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலையின் அதிகாரிகள், பணியாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.